<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண். 30/2019</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திரு. இராஜா முகம்மது அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **26.11.2025** |
| **பெயர்** | **முகமது சாதிக்** |
| **த/பெ** | **அப்துல் ஜலிக்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 2.30 பி.எம்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

13. வழக்கு தொடுப்பதற்கு முன்பு நவம்பர் 2018 ல் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். 14.12.2018 ல் பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். 31.01.2019–ல் மீண்டும் வாதிகள் தரப்பில் ஒரு அறிவிப்பு அனுப்பபட்டது என்றால் சரிதான். அதன் பிற்பாடு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 31.01.2019 லிருந்தே இந்த வழக்கு தொடுத்த காலம் வரை நான் பிரதிவாதிகளை பார்க்கவில்லை என்றால் சரிதான்.

14. வழக்கு சொத்தை வாங்குவதற்கு முன்பு அளந்ததாக கூறியுள்ளேன். அப்போது அளவுகள் சரியாக இருந்ததா என்றால் இருந்தது. வழக்கு சொத்தை வாங்கிய தேதியிலிருந்து சுமார் 8 நாட்களுக்கு முன்பாக தான் அளந்து பார்த்தேன். மீண்டும் செப்டம்பர் மாதம் நீதிமன்றத்தில் மனு செய்து வழக்கு சொத்தை அளந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 8 ஆவணத்தில் என்னுடைய சொத்தினை மட்டும் தான் அளந்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய சொத்திற்கு மேற்கு பக்கமும், தெற்கு பக்கமும் பிரதிவாதிகளின் இடம் தான் உள்ளது என்றால் சரிதான்.என் படி சர்வேயர் அறிக்கையில் குறிப்பிட்டள்ளது போல் தெற்கு பக்கத்தில் என் நிலத்திற்கும், பிரதிவாதி இடத்திற்கும் இடையே காலி இடம் உள்ளதா என்றால் சரியல்ல, தெரு உள்ளது.

15. மேற்சொன்ன காலி இடம் குறித்து வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையிலோ அல்லது சர்வேயர் அறிக்கையிலோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் பத்தி 3–ல் மேற்கு பக்கம் முழுவதும் கட்டப்பட்ட சுமார் 5 வருடம் மதிக்கத்தக்க கட்டிடம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையின் படி 2017 ல் கட்டிடம் கட்டப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது என்றால் அறிக்கையில் சுமார் 5 வருடம் என்றே குறிப்பிட்டுள்ளது. என் பிரமாண வாக்குமூலத்தில் 6 ம் பத்தியில் மேற்கு பக்கத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

16. வா.சா.ஆ 8 ஆவணத்தில் மதில் சுவர் எழுப்பி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் பிரமாண வாக்குமூலத்திலும், சர்வேயர் அறிக்கையிலும் எந்த அளவுகளையும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என் வழக்குரையில் பிரதிவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி 360 சதுர அடி என உள்ளது. ஆனால் சர்வேயர் அறிக்கையில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி 268 சதுர அடி என்று உள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையர் அறிக்கைக்கு வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபணையில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி 290 சதுர அடி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் சர்வேயர் 20 சதுர அடி குறைவாக குறிப்பிட்டு இருப்பதாகவும், சரியான அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை, சரியான அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றும் வாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான்.

17. வாதிகளே சர்வேயர் அறிக்கை குறித்து ஆட்சேபணை தெரிவித்த போது அந்த அறிக்கையானது சட்டப்படி செல்லாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் உண்மையில் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அதற்கான அளவுகளை குறிப்பிட்டு இருப்பேன் என்றும் அவ்வாறு செய்யாத காரணத்தினால் தான் எனது பிரமாண வாக்குமூலத்திலே, வா.சா.ஆ 8 ஆவணத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் ஆணையர் அளந்த பிறகு எனது வழக்குரையை திருத்தம் செய்ய எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் அந்த சமயத்தில் பேச்சு வார்த்தை நடத்தி வந்தார்கள். வழக்கு நடக்கும்போது கூட எந்த திருத்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

18. பிரதிவாதிகளை மிரட்டி பலமுறை அவர்கள் Whatsapp message அனுப்பி உள்ளேன் என்றால் ஒரு முறை தான் அனுப்பி உள்ளேன். இரண்டு முறை அளந்தபோதும் வழக்கு சொத்தை மட்டும் அளந்தேன் என்றும் வழக்கு சொத்தை சுற்றியுள்ள நிலங்களை அளந்தால் தான் வழக்கு சொத்தின் சரியான விஸ்தீர்னம் தெரிய வரும் என்றால் சரியல்ல.

மேற்சொன்ன என் சொத்திற்கும், பிரதிவாதிகள் சொத்திற்கும் இடையில் உள்ள காலி மனையை அளந்து இருந்தாலே வழக்கு சொத்தின் விஸ்தீர்னம் தெரிந்து இருக்கும் என்றால் சரியல்ல.

19. என் வழக்குரையின் 7–ம் பத்தியில் 2019–ம் வருடம் ஏப்ரல் மாதம் பிரதிவாதிகள் அத்து மீறி வர முயற்சித்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளபோது நான் மேலே சொன்னது போல் ஜனவரி மாத்தில் இருந்து வழக்கு தொடுத்த காலம் வரை பிரதிவாதிகளை பார்த்ததில்லை என்று முரணாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு இருக்கும்போது நான் கோரியுள்ள 2–ம் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு இருக்கையில் நான் பிரதிவாதிகளுடன் சமாதானம் பேசியதாக கூறியது தவறு என்றால் சரியல்ல.

20. வா.சா.ஆ–8 ஆவணத்தில் எந்த பக்கத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பதை குறிப்பிடப்படவில்லை என்றும் சட்டத்திற்கு புறம்பாக நான் வா.சா.ஆ 8 ஆவணத்தை பெற்றுள்ளேன் அதனால் அந்த ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மேற்கு பக்கம் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும் தெற்கு பக்கம் நான் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக கூறிய நிலத்தைவிட அதிகாமான நிலம் என்னுடையது உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, சரியான அளவுகளுடன் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் நான் கோரிய முதல் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தகது அல்ல என்றும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 03.22. பி.எம்.**